රාජ්‍ය පරිපාලන, ස්වදේශ කටයුතු, පළාත් සභා හා පළාත් පාලන අමාත්‍යාංශය
பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு
Ministry of Public Administration, Home Affairs, Provincial Councils and Local Government

නිදහස් චතුරශ්‍රය, කොළඹ 07, ශ්‍රී ලංකාව.
சுதந்திர சதுக்கம், கொழும்பு 07,இலங்கை.
Independence Square, Colombo 07, Sri Lanka.

| | | | |
|---|---|---|---|
| මගේ අංකය<br>எனது இல<br>My No | MPA/TSD/02nd EB EXAM 2019 (I) | ඔබේ අංකය<br>உமதுஇல<br>Your No | |
| දිනය<br>திகதி<br>Date | 2024.08.21 | | |

**<u>ශ්‍රී ලංකා තාක්ෂණ සේවයේ II ශ්‍රේණියේ හා III ශ්‍රේණියේ නිලධරයන් සඳහා වන කාර්යක්ෂමතා කඩඉම් විභාගය - 2019(I) (2024)</u>**

උක්ත විභාගය සඳහා අයදුම්පත් කැඳවීමේ නිවේදනය අංක 2,397 දරන 2024.08.09 දිනැති ගැසට් පත්‍රය මගින් ප්‍රසිද්ධ කර ඇත. ඒ අනුව සුදුසුකම් සපුරා ඇති ශ්‍රී ලංකා තාක්ෂණ සේවයේ III ශ්‍රේණියේ නිලධරයන්ට එම ශ්‍රේණියට අදාළ කාර්යක්ෂමතා විභාගය සඳහා පමණක් ද, II ශ්‍රේණියේ නිලධරයන්ට එම ශ්‍රේණියට අදාළ වන කාර්යක්ෂමතා විභාගය සඳහා පමණක් ද ඉල්ලුම් කළ හැකි බව කාරුණිකව දන්වා සිටිමි. එම ගැසට් නිවේදනය හා අයදුම්පත්‍රය www.pubad.gov.lk වෙබ් අඩවිය ඔස්සේ ද බා ගත කළ හැකිය.

ප්‍රදීප් යසරත්න
ලේකම්
රාජ්‍ය පරිපාලන, ස්වදේශ කටයුතු පළාත් සභා හා පළාත් පාලන අමාත්‍යාංශය

දුරකථන අංකය / ෆැක්ස් 0112- 695187
විද්‍යුත් ලිපිනය pubadssd@gmail.com

දුරකථන / தொலைபேசி / Telephone: 011-2696211-13, 011-2166000
ෆැක්ස් / தொலைநகல் / Fax: 011-2695279
ඊ-මේල් / மின்னஞ்ச / E-mail: info@pubad.gov.lk
වෙබ් අඩවිය / இணையத்தளம் / Website: www.pubad.gov.lk

**Efficiency bar examination prescribed for officers in Grade II and Grade III of the Sri Lanka Technological Service - 2019 (I) (2024)**

The notification on calling applications for the above examination has been published in Gazette No. 2,397 dated 09.08.2024. Accordingly, it is kindly informed that the officers in Grade III of the Sri Lanka Technological Service who have satisfied the relevant qualifications can strictly apply for the efficiency bar examination prescribed for Grade III, and the officers in Grade II can strictly apply for the efficiency bar examination prescribed for Grade II. The relevant gazette notification and application can be downloaded from the website, www.pubad.gov.lk.

Sgd/ Pradeep Yasarathne
Secretary
Ministry of Public Administration, Home Affairs, Provincial Councils and Local Government

Telephone/ Fax: 0112- 695187
E- mail: pubadssd@gmail.com

**இலங்கை தொழில்நுட்ப சேவையின் தரம் II மற்றும் தரம் III உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை - 2019(I) (2024)**

மேற்படி பரீட்சைக்கான விண்ணப்பங் கோரல் அறிவித்தல் இலக்கம் 2,397 ஐக் கொண்ட 2024.08.09 ஆம் திகதிய வர்த்தமானி மூலம் வெளியிடப்பட்டுள்ளது. இதன்படி, தகைமைகளை பூர்த்தி செய்துள்ள இலங்கை தொழில்நுட்ப சேவையின் தரம் III உத்தியோகத்தர்களுக்கு அத்தரத்துக்குரிய வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சைக்கு மாத்திரமும் தரம் II உத்தியோகத்தர்களுக்கு அத்தரத்துக்குரிய வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சைக்கு மாத்திரமுமே விண்ணப்பிக்க முடியும் என தயவுடன் தெரிவித்துக் கொள்கிறேன். அவ்வர்த்தமானி அறிவித்தல் மற்றும் விண்ணப்பத்தை www.pubad.gov.lk என்ற இணையத்தளத்திலிருந்து தரவிறக்கம் செய்து கொள்ளலாம்

ஒப்பம்/. பிரதீப் யசரத்ன
செயலாளர்
பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

தொலைபேசி இலக்கம் / தொலைநகல் 0112- 695187
மின்னஞ்சல் முகவரி pubadssd@gmail.com

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2397 - 2024 අගෝස්තු මස 09 වැනි සිකුරාදා - 2024.08.09

*2397 ஆம் இலக்கம் – 2024 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 09 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (IIஅ) – விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் – வெற்றிடம் | 1758 | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 1759 |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலூன பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2024, ஓகத்து மாதம் 30 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2024, ஓகத்து மாதம் 16 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*“ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரனியல் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.”*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2024, ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

1755-B 82596-5,441 (2024/08)

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| அநுராதபுரம் | மிகிந்தலை | மான் கடவல பிரிவின் பிறப்பு, இறப்பு பதிவாளர் மற்றும் நுவரகம் பலாத்த பிரிவின் விவாகப் பதிவாளர் (கண்டி/ பொது) பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், அநுராதபுரம். |

*08-19*

---

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

### இலங்கை தொழில்நுட்பச் சேவையின் தரம் II உத்தியோத்தர்களுக்கான வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை - 2019 (I) (2024)

இலங்கை தொழில்நுட்பச் சேவையின் அங்கீகரிக்கப்பட்ட சேவைப் பிரமாணக் குறிப்புக்கு இணங்க மேற்படி பரீட்சை, பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் 2024, நவெம்பர் மாதத்தில் கொழும்பில் நடாத்தப்படும் என்பது இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

01. (i) இப்பரீட்சை, பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படும். பரீட்சையை நடாத்துவது தொடர்பில் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் கட்டுப்படுவது அவசியமாகும். இச்சட்டதிட்டங்களை மீறினால், பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைகளுக்கு அவர்கள் உட்பட வேண்டி ஏற்படும்.

(ii) விண்ணப்பதாரர்களுக்கு விதிக்கப்பட்டுள்ள சட்டங்கள், வர்த்தமானி அறிவித்தல் தனியாகப் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

02. இந்தப் பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்கான மாதிரி விண்ணப்பப் படிவம் இந்த அறிவித்தலின் இறுதியில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. அந்த மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு இணங்க விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களைத் தயாரிக்க வேண்டும் என்பதுடன் இலங்கை தொழில்நுட்பவியல் சேவையின் மத்திய அரச சேவையிலுள்ள உத்தியோகத்தர்களாயின், தமது திணைக்களத் தலைவர் ஊடாகவும், இலங்கை தொழில்நுட்பவியல் சேவையின் மாகாண அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர்களாயின், அவர்கள் சேவையாற்றும் மாகாண சபையின் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளரின் ஊடாகவும், 2024.09.09 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கும் விதத்தில் "பரீட்சை ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு (நிறுவன மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள்) கிளை, இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், த. பெ. 1503, கொழும்பு" என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்ப வேண்டும். விண்ணப்பங்களை இட்டு அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "இலங்கை தொழில்நுட்பவியல் சேவையின் தரம் II உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை - 2019 (I) (2024) என்று குறிப்பிடுதல் வேண்டும். விண்ணப்பங்கள் பொறுப்பேற்கப்படும் இறுதித் திகதிக்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

03. **ஆளடையாளம்**: பரீட்சார்த்திகள், பரீட்சை மண்டபத்தினுள் தாம் தோற்றும் ஒவ்வொரு பாடத்திற்காகவும் மண்டபப் பொறுப்பாளர் திருப்தியடையும் விதத்தில் தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்த வேண்டும். அதற்காகப் பின்வருவனவற்றில் ஏதேனும் ஒரு ஆவணம் ஏற்றுக்கொள்ளப்படும் :-

(அ) தேசிய ஆள் அடையாள அட்டை ;
(ஆ) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு ;
(இ) செல்லுபடியாகும் இலங்கை சாரதி அனுமதிப்பத்திரம்.

அத்துடன் பரீட்சார்த்திகள் ஆளடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்ளக் கூடிய விதத்தில் முகத்தையும் இரு காதுகளையும் மறைக்காது பரீட்சை மண்டபத்தினுள் நுழைதல் வேண்டும். அத்துடன் தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்த மறுக்கும் விண்ணப்பதாரர்கள் பரீட்சை மண்டபத்தினுள் அனுமதிக்கப்படமாட்டார்கள். மேலும் பரீட்சை மண்டபத்தினுள் நுழைந்ததிலிருந்து பரீட்சை முடியும் வரை பரீட்சை அதிகாரிகளால் அடையாளம் காணக்கூடிய விதத்தில் முகத்தையும் இரு காதுகளையும் மறைக்காதிருத்தல் வேண்டும்.

*04.* **விண்ணப்பப்படிவம்**: (i) மாதிரி விண்ணப்பப் படிவத்துக்கு ஒத்திசைவான முறையில் "ஏ4" அளவு கடதாசியில் இரு பக்கங்களையும் பயன்படுத்தி விண்ணப்பப் படிவத்தை தயாரித்தல் வேண்டும். இலக்கம் 01 முதல் 06 வரை முதலாம் பக்கத்திலும் மீதமுள்ளவை ஏனைய பக்கங்களிலும் உள்ளடங்க வேண்டும். விண்ணப்பப் படிவத்தை தட்டச்சுச் செய்து தயாரித்துக்கொள்ள முடியுமாயினும், அதனை சரியாகவும் தெளிவாகவும் விண்ணப்பதாரரின் கையெழுத்தினாலேயே நிரப்புதல் வேண்டும். விண்ணப்பதாரர்கள் பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலத்திலேயே விண்ணப்பப்படிவத்தை நிரப்புதல் வேண்டும்.

(ii) விண்ணப்பப் படிவத்தைத் தயாரிக்கும்போது அதன் தலைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சையின் பெயர், சிங்கள மொழிமூல விண்ணப்பப் படிவங்களில் சிங்கள மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும், தமிழ் மொழிமூல விண்ணப்பப் படிவங்கள் தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் குறிப்பிடப்படுதல் வேண்டும். மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கு இணக்கமாக அமையாத விண்ணப்பங்களும், முழுமையற்ற தகவல்களைக் கொண்ட விண்ணப்பங்களும் அறிவித்தல் எதுவுமின்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பதாரரால் பூர்த்தி செய்யப்படும் விண்ணப்பப்படிவம், பரீட்சை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பப்படிவத்திற்கு இணக்கமாக உள்ளதா என்பதை விண்ணப்பதாரர்களே சரிபார்த்துக் கொள்ள வேண்டும் என்பதுடன், அந்த விண்ணப்பப்படிவத்தின் போட்டோக் கொப்பி பிரதியொன்றை கைவசம் வைத்திருப்பது பயனுள்ளதாக அமைய முடியும்.

(iii) முதல் முறையாக இப்பரீட்சையின் ஒரு பாடத்திற்கு அல்லது இரண்டு பாடங்களுக்கும் விண்ணப்பிக்கும் உத்தியோகத்தர்கள் எந்தவொரு பரீட்சைக் கட்டணமும் செலுத்த வேண்டியதில்லை. எவ்வாறாயினும், அதற்கு மேற்பட்ட தடவைகள் உத்தியோகத்தர்கள் பரீட்சைக்கு விண்ணப்பிப்பதாயின் முழுப் பரீட்சைக்குமான பரீட்சைக் கட்டணமாக ரூபா 500.00 உம், ஒரு பாடத்திற்கான பரீட்சைக் கட்டணமாக ரூபா 250 உம் செலுத்த வேண்டும். பரீட்சைக் கட்டணத்தை விண்ணப்பங்கள் பொறுப்பேற்கப்படும் இறுதித் திகதியில் அமைந்துள்ள அதற்கு முன்னர் பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் 20-03-02-13 ஆம் இலக்க வருமானத் தலைப்பிற்கு வரவு வைக்கும் விதத்தில் நாட்டிலுள்ள எந்தவொரு தபால் நிலையத்திலும் அல்லது உபதபால் அலுவலகத்திலும் செலுத்திப் பெறப்படும் பற்றுச்சீட்டை விண்ணப்பத்தின் உரிய இடத்தில் கழறாதவாறு ஒட்டுதல் வேண்டும். இந்தப்பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியொன்றை விண்ணப்பதாரர் கைவசம் வைத்திருப்பது பயனுள்ளதாக அமையும். எந்தவொரு காரணத்திற்காகவும் இக்கட்டணம் மீளளிப்புச் செய்யப்படமாட்டாது. இப்பரீட்சைக்காகச் செலுத்தப்படும் கட்டணத்தை வேறு எந்தவொரு பரீட்சைக்கும் மாற்றுவதற்கும் இடமளிக்கப்படமாட்டாது.

(iv) இப்பரீட்சையானது சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழி மூலங்களில் நடாத்தப்படும். விண்ணப்பதாரர்கள் தமக்குரிய மொழிமூலமொன்றைத் தெரிவு செய்ய வேண்டும் என்பதுடன் உரிய அனைத்துப் பாடங்களுக்கும் அந்த மொழி மூலத்திலேயே விடை எழுதுதல் வேண்டும். விண்ணப்பிக்கும் மொழி மூலத்தை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

(v) விண்ணப்பங்கள் பொறுப்பேற்கப்படும் இறுதித் திகதியில் இலங்கை தொழில்நுட்பச் சேவையின் தரம் II இற்கு தரமுயர்வு பெற்ற உத்தியோகத்தர்கள் இரண்டாம் வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சைக்குத் தோற்ற முடியும்.

**(vi) இலங்கை தொழில்நுட்பச் சேவையின் தரம் III உத்தியோகத்தர்கள் இரண்டாம் வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சைக்கு விண்ணப்பிக்க முடியாது**.

05. (i) வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டவர்கள் மாத்திரம் விண்ணப்பிப்பார்கள் என்ற எடுகோளின் அடிப்படையில் விண்ணப்பங்கள் பொறுப்பேற்கப்படும் இறுதித் திகதியில் அல்லது அதற்கு முன்னர் பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தி தோற்றும் மொழி மூலம், விண்ணப்பிக்கும் பரீட்சை, விண்ணப்பதாரரின் கையொப்பம் மற்றும் கையொப்பம் உறுதிப்படுத்தல், திணைக்களத் தலைவரின் சான்றிதழ் என்பவற்றுடன் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை அனுப்பியுள்ள விண்ணப்பதாரர்களுக்கு பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சைக்கான அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்படும். விண்ணப்பதாரர்களுக்கு பரீட்சை அனுமதிப் பத்திரங்கள் அனுப்பப்பட்டதன் பின்னர் உடனடியாக அது தொடர்பில் குறிப்பிட்டு பத்திரிகை அறிவித்தலொன்று இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் வெளியிடப்படும்.

அறிவித்தல் வெளியிடப்பட்டு 2 அல்லது 3 நாட்கள் கடந்த பின்னரும் அனுமதிப்பத்திரம் கிடைக்காவிட்டால், அவ் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள விதத்தில் அது தொடர்பாக இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்திற்கு அறிவிக்க வேண்டும். அதன்போது, விண்ணப்பதாரரின் முழுப்பெயர், முகவரி, தேசிய அடையாள அட்டை இலக்கம், பரீட்சையின் பெயர் என்பவற்றைக் குறிப்பிட்டு, அவ்வாறு விசாரிக்கும் போது விண்ணப்பதாரர் தம் வசம் வைத்துள்ள விண்ணப்பப் படிவத்தின் பிரதி, பரீட்சைக் கட்டணம் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டின் பிரதி, விண்ணப்பத்தை தபாலில் அனுப்பும் போது பதிவு செய்து பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டு என்பவற்றைக் கைவசம் வைத்திருப்பது அவசியமாகும். கொழும்புக்கு வெளியிலுள்ள விண்ணப்பதாரர்களாயின், தொலைநகல் மூலம் அனுமதிப்பத்திரத்தின் பிரதியொன்றைப் பெற்றுக்கொள்வதற்கான தொலைநகல் இலக்கமொன்றையும் மேலே குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் அடங்கிய கோரிக்கை கடிதமொன்றையும் பரீட்சைத் திணைக்களத்திற்கு அனுப்பி விசாரிப்பது பயனுள்ளதாக அமையும்.

மேற்குறித்த தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்யத் தவறும் விண்ணப்பதாரர்களால் பின்னர் சமர்ப்பிக்கப்படும் ஆவணங்கள் கவனத்தில் எடுக்கப்படமாட்டா.

(ii) பரீட்சைக்கான அனுமதிப் பத்திரத்தில் விண்ணப்பதாரரின் கையொப்பத்தை நிறுவனத் தலைவர் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட ஒரு உத்தியோகத்தர் ஊடாகச் சான்றுப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும். பரீட்சைக்குத் தோற்றும் உத்தியோகத்தர்கள் பரீட்சை மண்டபப் பொறுப்பாளரிடம் தங்களது கையொப்பம் சான்றுப்படுத்தப்பட்ட அனுமதிப்பத்திரங்களை மாத்திரம் சமர்ப்பித்தல் வேண்டும். அத்தகைய அனுமதிப் பத்திரமொன்று இல்லாமல் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதி வழங்கப்படமாட்டாது.

06. இரண்டாம் வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடையவதற்குரிய காலப் பகுதியினுள் தமது தற்றுணிபின் அடிப்படையில் ஒவ்வொரு பாடத்திற்கும் தனித்தனியாகவும் வெவ்வேறு தடவைகளிலும் உத்தியோகத்தர்கள் பரீட்சைக்குத் தோற்ற முடியும். எவ்வாறாயினும், சித்தியடைவதற்கு ஒவ்வொரு வினாப்பத்திரத்திலும் ஆகக்குறைந்தது 40% புள்ளிகளைப் பெறுவது அவசியமாகும்.

07. **பரீட்சையின் பெறுபேறுகளை வெளியிடுதல்** : மாகாண அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர்களின் பெறுபேறுகளை உரிய மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளருக்கும், பெறுபேறுகள் அரசாங்க சேவை, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளருக்கும் அனுப்புவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

08. **பரீட்சை நடைமுறைகள்**: II ஆம் தரத்திலுள்ள உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை பின்வரும் 02 வினாப்பத்திரங்களைக் கொண்டிருக்கும்.

பாட இலக்கம் (03) - தாபனவிதிக் கோவை (நேரம் 2 மணித்தியாலங்கள்) (100 புள்ளிகள்)
பாட இலக்கம் (04) - நிதிப் பிரமாணங்கள் (நேரம் 2 மணித்தியாலங்கள்) (100 புள்ளிகள்)

**தாபன விதிக் கோவை (பாட இலக்கம் - 03) - பாடத்திட்டம்**

இவ்வினாப்பத்திரம் தாபன விதிக்கோவையின் பின்வரும் அத்தியாயங்களை அடிப்படையாகக் கொண்டதாக அமையும்.

| | |
|---|---|
| அத்தியாயம் XV | கற்கை, பயிற்சி அல்லது கடமை நிமித்தம் வெளிநாட்டு செல்லல் |
| அத்தியாயம் XVI | விடுமுறைப் பிரயாணங்கள் |
| அத்தியாயம் XXIII | சிலவகை நோய்களால் பீடிக்கப்பட்டுள்ள அரசாங்க அலுவலர்களுக்கான விசேட சலுகைகள் மற்றும் அவை தொடர்பான நிபந்தனைகள் |
| அத்தியாயம் XXIV | சம்பளக் கடன்கள் மற்றும் முற்பணங்கள் |
| அத்தியாயம் XXV | தொழிற்சங்கங்களின் உறுப்பினர்களுக்கான சலுகைகள் |
| அத்தியாயம் XXVII | தொடர்பிணைப்பு வழி |
| அத்தியாயம் XXVIII | நிர்வாக நடைமுறைகளும் செயல்முறைகளும் |
| அத்தியாயம் XXX | அரசாங்கம் பணியாளர்கள் மீது கொண்டுள்ள உரிமைகள் |
| அத்தியாயம் XXXIII | சட்ட மதியுரையும் சட்ட நடவடிக்கைகளும் |
| அத்தியாயம் XLVII | பொதுவான நடத்தைகளும் ஒழுக்கமும் |
| அத்தியாயம் XLVIII | ஒழுக்காற்று நடவடிக்கை தொடர்பான விதிமுறைகள் |

**நிதிப்பிரமாணங்கள் (பாட இலக்கம் - 04) - பாடத்திட்டம்** :

இவ்வினாப்பத்திரம் நிதிப்பிரமாணங்களின் பின்வரும் அத்தியாயங்களை அடிப்படையாகக் கொண்டதாக அமையும்.

(i) VI ஆம் அத்தியாயம்
அரசாங்க நிதி முதலியவற்றிற்கான பொறுப்பு, கட்டு நிதி மற்றும் வங்கிக் கணக்குகள், உப படிவப் புத்தகங்கள், நிதி, முத்திரைகள் போன்றவை தொடர்பான தொகை மதிப்பீட்டுச் சபைகள், கட்டு நிதி, வங்கிக் கணக்குகள்
(நி. பி. 315 முதல் 396 வரை)

(ii) XIII ஆம் அத்தியாயம்
வழங்கல்கள், வேலைகள் மற்றும் சேவைகள்:
பெறுகைகள் மற்றும் ஒப்பந்தங்கள், வழங்கல்கள், பொருட்களின் பொறுப்பு மற்றும் சரிபிழை பார்த்தல், மேலதிக பொருட்கள் மற்றும் பயன்படுத்த முடியாத பொருட்கள்
(நி. பி. 685 முதல் 775 வரை)

09. இந்தப் பரீட்சை அறிவித்தலில் ஏற்பாடுகள் செய்யப்படாத ஏதேனும் விடயங்கள் இருப்பின், பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரின் தீர்மானம் இறுதித் தீர்மானமாக அமையும்.

10. விண்ணப்பதாரர்களுக்கு பரீட்சை அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்படுவதை அவர்கள் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ளதாக ஏற்றுக் கொண்டதாகக் கருதக்கூடாது.

11. சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழி மூலங்களில் பிரசுரிக்கப்படும் இவ் அறிவித்தலில் மொழி வாசகங்களுக்கு இடையில் ஏதேனும் பொருத்தமின்மைகள் அல்லது இணக்கமின்மைகள் இருப்பதாகத் தெரியவருமிடத்து அவ்வாறான சந்தர்ப்பங்களில் சிங்கள மொழிமூலமான அறிவித்தல் பயன்வலுப் பெறும்.

பிரதீப் யசரத்ன,
செயலாளர்,
பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண
சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு.

பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள்
மற்றும் உள்ளூராட்சி அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 7,
2024, யூலை 31.

(அலுவலக உபயோகத்துக்கு மட்டும்)

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கை தொழில்நுட்பச் சேவையின் தரம் II அலுவலர்களுக்கான வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை - 2019 (I) (2024)**

EFFICIENCY BAR EXAMINATION PRESCRIBED FOR OFFICERS IN GRADE II OF SRI LANKA TECHNOLOGICAL SERVICE - 2019 (I) (2024)

(ஓர் உத்தியோகத்தர் தரம் III மற்றும் தரம் II பரீட்சை ஆகிய இரண்டிற்கும் ஒரே தடவையில் விண்ணப்பிக்க முடியாது)

பரீட்சைக்குத் தோற்றும் மொழிமூலம் :
சிங்களம்-2
தமிழ்-3
ஆங்கிலம்-4

(உரிய இலக்கத்தினைக் கூட்டினுள் எழுதவும்)

1. நீர் சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டது மத்திய அரசாங்கத்தின் கீழா? அல்லது எந்த மாகாண அரசாங்க சேவையின் கீழாகும் ?
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதுக)

| அரசாங்க சேவை | இலக்கம் |
|---|---|
| மத்திய அரசு | 10 |
| மேல் மாகாணம் | 01 |
| மத்திய மாகாணம் | 02 |
| தென் மாகாணம் | 03 |
| வட மாகாணம் | 04 |

| அரசாங்க சேவை | இலக்கம் |
|---|---|
| கிழக்கு மாகாணம் | 05 |
| வடமேல் மாகாணம் | 06 |
| வடமத்திய மாகாணம் | 07 |
| ஊவா மாகாணம் | 08 |
| சப்பிரகமுவ மாகாணம் | 09 |

2. (அ) முழுப்பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்) :
.....................................................................................................................................................................
(உதாரணம் : HERATH MUDIYANSELAGE SAMAN KUMARA GUNAWARDHANA)

(ஆ) இறுதியில் வரும் பெயரை முதலிலும் ஏனைய பெயர்களின் முதலெழுத்துக்களை இறுதியிலும் இட்டு பெயர் :
(ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்) :
.....................................................................................................................................................................
(உதாரணம் : GUNAWARDHANA, H.M.S.K.)

(இ) முழுப்பெயர் (சிங்களத்தில்/ தமிழில்) :
.....................................................................................................................................................................

03. அலுவலக முகவரி (பரீட்சை அனுமதிப் பத்திரம் இந்த முகவரிக்கு தபாலில் அனுப்பப்படும்) :
.....................................................................................................................................................................
(ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்) :
.....................................................................................................................................................................
(சிங்களத்தில்/ தமிழில்)

04. பாலினம் :
ஆண் - 0
பெண் - 1
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதுக)

05. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :

06. தொலைபேசி இலக்கம் :

07. தோற்றும் பாடம்/ பாடங்கள் :

| பாடம் | பாட இலக்கம் |
|---|---|
| ............................ | |
| ............................ | |

08. (i) பிறந்த திகதி :

ஆண்டு : மாதம் : திகதி :

(ii) 2024.09.09 ஆந் திகதியில் வயது :

வருடங்கள் : மாதங்கள் : நாட்கள் :

09. (i) பதவிப் பெயர் : ..........................................
(ii) இலங்கை தொழில்நுட்ப சேவையின் தரம் II இற்கு பதவி உயர்வு பெற்ற திகதி : ..........................................
(iii) இலங்கை தொழில்நுட்ப சேவையின் தரம் II இற்கு பதவி உயர்வுக் கடித இலக்கம் மற்றும் திகதி
கடித இலக்கம் : .......................................... திகதி : ..........................................

10. நீர் சார்ந்துள்ள அமைச்சு/ திணைக்களம் : ..........................................

11. பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டின் விபரங்கள் :

(i) பரீட்சைகள் கட்டணம் செலுத்திய தபால் அலுவலகம்/ உப தபால் அலுவலகம்
: ..........................................................................................................................................

(ii) பற்றுச்சீட்டு இலக்கம் மற்றும் திகதி :

.............................................................................

(iii) செலுத்திய தொகை : .......................................................................................................................

| பற்றுச்சீட்டை கழறாதவாறு இங்கே ஒட்டுங்கள். |
|---|

(பற்றுச்சீட்டின் பிரதியொன்றைக் கைவசம் வைத்திருப்பது பயனுள்ளதாக அமைய முடியும்.)

மேலே குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் சரியானவை என்றும், விண்ணப்பித்துள்ள மொழி மூலத்தில் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு உரிமையுள்ளது என்றும் பிரகடனப்படுத்துகிறேன். மேலும் பரீட்சையை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுதல் தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு உட்படுவேன் என்றும் பிரகடனப்படுத்துகிறேன்.

.................................................................
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :......................................

**கையொப்பத்தை உறுதிப்படுத்தல்**

எனது அலுவலகத்திலுள்ள ஓர் உத்தியோகத்தரும் தனிப்பட்ட முறையில் நான் அறிந்தவருமான திரு./ திருமதி/ செல்வி .......................................... என்பவர் .............................. ஆந் திகதி என் முன்னிலையில் கையொப்பமிட்டார் என்றும், உரிய பரீட்சைக் கட்டணத்திலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளார் என்றும்/உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தி அதற்கான பற்றுச்சீட்டை ஒட்டியுள்ளார் என்றும் உறுதிப்படுத்துகிறேன்.

.................................................................
உறுதிப்படுத்தும் உத்தியோகத்தரின் கையொப்பம்.

திகதி : .................................................................
உறுதிப்படுத்தும் அலுவலரின் பெயர் : .................................................................
பதவி : .................................................................
முகவரி : .................................................................
(பதவி முத்திரை மூலம் உறுதிப்படுத்தவும்.)

**திணைக்களத் தலைவரின் சான்றிதழ்**

மேலே இல. 01 முதல் 11 வரை அடங்கியுள்ள தகவல்கள் சரியானவை என்றும், இந்த விண்ணப்பதாரருக்கு இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கான தகைமைகள் உள்ளன என்றும், அவரால் குறிப்பிடப்பட்டுள்ள மொழி மூலத்தில் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அவருக்கு தகைமைகள் உள்ளன என்றும் உறுதிப்படுத்துகின்றேன்.

.................................................................
திணைக்களத் தலைவரின்
கையொப்பம் மற்றும் பதவிப்பெயர்.
(பதவி முத்திரை மூலம் உறுதிப்படுத்தவும்).

திகதி : .................................................................

08-52

## பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

### *இலங்கை தொழில்நுட்பவியல் சேவையின் தரம் III உத்தியோத்தர்களுக்கான வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை - 2019 (I) (2024)*

*இலங்கைத் தொழில்நுட்பவியல் சேவையின் அங்கீகரிக்கப்பட்ட சேவைப் பிரமாணக் குறிப்பிற்கு இணங்க மேற்படி பரீட்சை, பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் 2024, நவெம்பர் மாதத்தில் கொழும்பில் நடாத்தப்படும் என்பது இத்தால் அறிவிக்கப்படுகின்றது.*

*01.* (i) *இப்பரீட்சை, பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படும் என்பதுடன், இப்பரீட்சையை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுதல் தொடர்பில் விதிக்கப்பட்டுள்ள சட்டதிட்டங்களுக்கு விண்ணப்பதாரிகள் கட்டுப்பட வேண்டும். இச்சட்டதிட்டங்களை மீறினால், பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைகளுக்கு அவர்கள் உட்பட வேண்டி ஏற்படும்.*

(ii) *விண்ணப்பதாரர்களுக்கு விதிக்கப்பட்டுள்ள சட்டங்கள், வர்த்தமானி அறிவித்தல் தனியாகப் பிரசுரிக்கப்பட்டுள்ளன.*

*02. இந்தப் பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்கான மாதிரி விண்ணப்பப்படிவம் இந்த அறிவித்தலின் இறுதியில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. அந்த மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கு இணங்க விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களைத் தயாரிக்க வேண்டும் என்பதுடன் இலங்கை தொழில்நுட்பவியல் சேவையின் மத்திய அரசாங்க சேவையிலுள்ள அலுவலர்களாயின், தமது திணைக்களத் தலைவர் ஊடாகவும், இலங்கைத் தொழில்நுட்பவியல் சேவையின் மாகாண அரசாங்க சேவையிலுள்ள அலுவலர்களாயின், அவர்கள் சேவையாற்றும் மாகாண சபையின் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளரின் ஊடாகவும் 2024.09.09 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கும் விதத்தில் "பரீட்சை ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு (நிறுவன மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள்) கிளை, இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், த. பெ. 1503, கொழும்பு" என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும். விண்ணப்பங்களை இட்டு அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "இலங்கை தொழில்நுட்பவியல் சேவையின் தரம் III உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை 2019 (I) 2024 என்று குறிப்பிடுதல் வேண்டும். விண்ணப்பங்கள் பொறுப்பேற்கப்படும் இறுதித் திகதிக்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.*

*03.* ***ஆளடையாளம்***: *பரீட்சார்த்திகள், பரீட்சை மண்டபத்தினுள் தாம் தோற்றும் ஒவ்வொரு பாடத்திற்காகவும் மண்டபப் பொறுப்பாளர் திருப்தியடையும் விதத்தில் தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்த வேண்டும். அதற்காக பின்வருவனவற்றில் ஏதேனும் ஒரு ஆவணம் ஏற்றுக்கொள்ளப்படும்.*

*(அ) தேசிய ஆள் அடையாள அட்டை;*
*(ஆ) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு;*
*(இ) செல்லுபடியாகும் இலங்கை சாரதி அனுமதிப்பத்திரம்.*

*அத்துடன் பரீட்சார்த்திகள் ஆளடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்ளக்கூடிய விதத்தில் முகத்தையும் இரு காதுகளையும் மறைக்காது பரீட்சை மண்டபத்தினுள் நுழைதல் வேண்டும். அத்துடன் தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்த மறுக்கும் விண்ணப்பதாரர்கள் பரீட்சை மண்டபத்தினுள் அனுமதிக்கப்படமாட்டார்கள். மேலும், பரீட்சை மண்டபத்தினுள் நுழைந்ததிலிருந்து பரீட்சை முடியும் வரை பரீட்சை அதிகாரிகளால் அடையாளம் காணக்கூடிய விதத்தில் முகத்தையும் இருகாதுகளையும் மறைக்காதிருத்தல் வேண்டும்.*

*04.* ***விண்ணப்பப்படிவம்*** :

(i) *மாதிரி விண்ணப்பப்படிவத்துக்கு ஒத்திசைவான முறையில் "ஏ4" அளவு கடதாசியில் இரு பக்கங்களையும் பயன்படுத்தி விண்ணப்பப்படிவத்தை தயாரித்தல் வேண்டும். இலக்கம் 01 முதல் 06 வரை முதலாம் பக்கத்திலும் மீதமுள்ளவை ஏனைய பக்கங்களிலும் உள்ளடங்க வேண்டும். விண்ணப்பப்படிவத்தை தட்டச்சுச் செய்து தயாரித்துக் கொள்ள முடியுமாயினும் அதனை சரியாகவும் தெளிவாகவும் விண்ணப்பதாரரின் கையெழுத்திலேயே நிரப்புதல் வேண்டும். விண்ணப்பதாரர்கள் பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலத்திலேயே விண்ணப்பப்படிவத்தை நிரப்புதல் வேண்டும்.*

(ii) *விண்ணப்பப்படிவத்தைத் தயாரிக்கும் போது அதன் தலைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சையின் பெயர், சிங்கள மொழி மூல விண்ணப்பப்படிவங்களில் சிங்கள மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும், தமிழ்*

